DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No.70/2021

PROSECUTION WITNESS No - PW- 1

| | | | |
|---|---|---|---|
| Name : | முத்துலெட்சுமி | Caste: | |
| Father Name/Husband name | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 30th day of September 2024.

எதிரிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்

**<u>முதல் விசாரணை :</u>**

எனது ஊர் பாப்பாகுடி திருப்புவனம் தாலுகா. கூலிவேலை செய்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன ராமராஜன் எனது மகன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் பெயர் சந்தோஷ் மற்றும் கணேஷ்குமார். இருவரும் எங்கள்ஊரைச்சேர்ந்தவர்கள் தான். முதல் எதரி சந்தோஷின் தாயார் பெயர் ஜெயசித்ரா. எனது மகன் ராமராஜிற்கு திரும்ண ஆகவில்லை அவருக்கு இறக்கும்போது 20 வயது. காவல்நிலையத்தில் நான் தான் புகார் தெரிவித்தேன்.

நான் இன்றிலிருந்து 2 ஆண்டுகளுக்குமுன்னால் கொரனா காலகட்டத்தில் எனது மகள் காளீஷ்வரியின் கணவர் வேலாங்குடி கிராமத்தில் இறந்துபோயிவிட்டார். அதனால் நான் என் மகளுடன் கேதத்திற்கு பின்என் மகன் வீட்டிலேயே தங்கியிருந்தேன்.அந்த சமயத்தில் எனது மகன் எனது அக்கா வீட்டில் தங்கியிருந்தார். எனது அக்கா மகன் ராமச்சந்திரன் 3 வருடங்களுக்கு முன்னால் தேதி மாதம் ஞாபகமில்லை, ஒருநாள் அதிகாலை எங்கள் ஊரில் உள்ள ஊரணிக்கு பக்கத்தில் என் மகன் வெட்டுப்பட்டு இறந்துகிடந்ததாக சொன்னார்கள். ஆஜர் எதிரிகள் பெயரைச்சொல்லி அவர்கள் என் மகனை வெட்டிக்கொண்டதாக தகவல் சொன்னார்கள். நானும் எனது மகளும் அழுதுகொண்டு சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கு காலை 9.00 மணியளவில் சென்று பார்த்தோம்.

என் மகனுக்கு 2 பக்கம் கழுத்து பகுதியிலும் இடதுபக்க காதிலும், இடது பக்க கண்ஆகிய இடங்களில் வெட்டுக்காயம் இருந்ததை பார்த்தேன். என்ன காரணத்திற்காக

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.09.30 17:32:41 +0530

மேற்கண்ட சம்பவம் நடந்தது என்பது எனக்கு தெரியாது. நானும் எனது அக்கா மகன் ராமச்சந்திரனும் காவல்நிலையம் சென்று புகார் தெரிவித்தோம். நான் கொடுத்த புகார்தான் **அ.சா.ஆ.1** . குறியீடு செய்யப்படுகிறது. என் அக்கா மகன் ராமச்சந்திரன் தான் புகாரை எழுதினான். அந்த புகார்வாக்குமூலம் **அ.சா.ஆ.2** . குறியீடு செய்யப்படுகிறது.

சம்பவத்தின்போது என் மகன் அணிந்திருந்த ஊதாநிற கைலி **சா.பொ.1** ஊதாகருப்புக்கலர் கோடுபோட்ட டிசர்ட் **சா.பொ.2.** அரக்குகலர் டவுசர் **சா.பொ.3.** நான் கொடுத்த புகார் சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். என் மகன் என்ன காரணத்திற்காக இறந்தார் என்று எனக்கு தெரியவில்லை. பிரேத விசாரணை முடித்து பிரேத்தை போலீசார் ஒப்படைத்தார்கள், நல்லடக்கம் செய்தோம்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

சாட்சி ஜானகி எனது அக்கா. ராமச்சந்திரன் அவரது மகன். சம்பவ சமயத்தில் விருதுநகர் வேலங்குடியில் இருந்தேன் என்றால் சரிதான். சம்பவம் பற்றி நான் கேள்விபடும்போது மணி சுமார் 7.00 இருக்கும். அதன்பிறகு நான் சம்பவயிடத்திற்கு வந்து என் மகன் இறந்துகிடந்ததை பார்த்தேன். அப்போது காலை 9.30 மணியிருக்கும். நாங்கள் சம்பவயிடத்திற்கு வந்தபிறகு தான் பிரேதத்தை அங்கிருந்து எடுத்தார்கள். நான் அதற்கு பிறகு பூவந்தி சென்றுவிட்டேன். பிரேதத்தை அங்கிருந்து எப்போது எடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது.

சம்பவம் பற்றி நான் கேள்விப்படும்போது காளீஸ்வரி என்னுடன் தான் இருந்தார். புகாரில் வேறு யார் கையெழுத்து போட்டார்கள் என்று எனக்கு தெரியாது. என் மகன் இறந்துகிடந்த தகவலை மட்டும்தான் ராமச்சந்திரன் சொன்னாரா என்றால் இரண்டுபேர் தான் வெட்டினார்கள் என்று ராமச்சந்திரன் சொன்னார். என் மகன்வெட்டுப்பட்டுக்கிடந்த இடம் ஊரணிக்கு அருகில் உள்ள கோவில் பக்கத்தில் என்றால் சரிதான். ஊரணிக்கு செல்லும்வழியில் பிச்சை வீடு, மலைச்சாமி வீடு, செல்வம் வீடு உள்ளது என்றால் சரிதான். சம்பவயிடத்திற்கு எதிரில் கருப்புராஜா வீடு உள்ளது என்றால் சரிதான். சுற்றிலும் வீடு உள்ளது. என் மகன் வேலை இல்லாமல் இருந்தார் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில்சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

என் மகன் போன் வைத்திருந்தார். அவரது போன் நம்பர் எனக்கு சொல்லமுடியாது. போனை எடுத்துச்செல்வது வழக்கம் என்றால் சரிதான். சம்பவயித்திலிருந்து திருமாஞ்சோலைக்கு வந்து அங்கிருந்துதான் பூவந்தி காவல்நிலையம் செல்லவேண்டும் என்றால் சரிதான். சம்பவயித்திலிருந்து பூவந்தி காவல்நிலையம் செல்வதற்கு 1 மணிநேரம்

SWARNAM J NATARAJAN
Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.09.30 17:32:48 +0530

ஆகும் என்றால் சரிதான். பூவந்தி காவல்நிலையம் செல்லும்போது பகல் 11.00 மணியிருக்கும். அதன் பின்னால் தான் புகார் கொடுத்தோம். எழுதப்பட்டிருந்த புகாரில் தான் கையெழுத்து போட்டுக்கொடுத்தேன் என்றால் சரிதான். புகாரை தான் தான் எழுதினேன் என ராமச்சந்திரன் சொன்னபிறகு தான் தெரியும். புகார் எழுத எவ்வளவு நேரம் எடுத்தது என்பது தெரியாது. சம்பவயித்திற்கு நான் சென்றபோதே போலீசார் நிறைய பேர் அங்கிருந்தார்கள் என்றால் சரிதான். யார் சொல்லி போலீசார் அங்கு வந்தார்கள் என்று எனக்குதெரியாது.

போலீசார் எதிரிகள் குறித்து என்னிடம் சொன்னார்கள் என்றால் சரிதான். கணேஷ்குமார் 2ம் எதிரி சிவகங்கையில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். காலை 9.00 மணிக்கு சம்பவயிடத்தை பார்த்தேன் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவத்திற்கு 10நாட்களுக்கு முன்பு நான் என் மகனை பார்த்தேன். அதற்கு பிறகு வியாழக்கிழமை இரவு அவர் இறந்ததாக கேள்விபடுவதற்கு முந்தையநாள் என்னிடம் போனில் பேசினார்.

அவர் இறந்த அன்று என்ன உடை உடுத்தியிருந்தார் என்பது எனக்கு தெரியாது. இறந்துபோன தினத்தில என் மகன் சா.பொ.1 முதல் 3 வரை உடுத்தியிருந்தாரா என்பது தெரியாது. அது என் மகனுடைய உடை என்று தான் தெரியும். ந ான் சொல்வது புகார் தரவில்லை என்றும் ரர்மச்சந்திரன் போனில் எந்த தகவலும் தெரிவிக்கவில்லை என்றும் போரீசார் கூறியதன் அடிப்படையில் எதிரிகளை பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல.

எங்கள் ஊரில் பழைய பஞ்சாயத்து தலைவர் சேவுகன் மணி, பூபதி வீடு உள்ளது என்றால் சரிதான். சேவுகனுக்கு எனது கணவர் 15 வலுருடங்களுக்கு முன்பு சில சொத்துக்களை விற்றுள்ளார் என்றால் சரிதான். குறைந்த விலையில் நிலத்தை விற்றுள்ளார் என பிரச்சனை இருந்துள்ளதா என்றால் இருந்திருக்கலாம் எனக்கு தெரியாது. எனது மகன் மது அருந்தும் சமயம் எல்லாம் பூபதி மணி வீட்டிற்கு சென்று குறைந்த விலைக்கு சொத்துக்களை வாங்கிச்சென்றதாக பிரச்சனை செய்துள்ளார் என்றால் சரியல்ல. எனது மகன் இறந்துகிடந்த இடத்திற்கு பின்னாலே மணி, பூபதி தோப்பு உள்ளது என்றால் சரியல்ல.

ஊரில் மணி, பூபதிதான் கொன்றார்கள் என பேசிக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. அவர்கள் மீது சந்தேகம் எழவில்லை. அவர்கள் தான் கொன்றதாக ஊரில் யாரும் சொல்லவில்லை. இந்த விரோதத்தின் காரணமாக என் மகனை பூபதி, மணியும்

SWARNAM J NATARAJAN Digitally signed by SWARNAM J NATARAJAN Date: 2024.09.30 17:32:54 +0530

கொன்றுவிட்டார்கள் என்றால் சரியல்ல. அதை மறைப்பதற்காக போலீசார் சொல்லிக்கொடுத்து எதிரிகள் மீது பொய்யாக குற்றம் சாற்றியுள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**. இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.09.30 17:33:00 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை

DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No.70/2021

PROSECUTION WITNESS No - PW- 2

| | | | |
|---|---|---|---|
| Name : | காளீஸ்வரி | Caste: | |
| Father Name/Husband name | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 30th day of September 2024.

எதிரிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்

**முதல் விசாரணை :**

1) நான் தற்போது பாப்பாகுடியில் நான் குடியிருந்து வருகிறேன். முத்துலெட்சுமி அசா.1 எனது தாயார். சாட்சி 3 ராமச்சந்திரன் எனது அண்ணன். நான் வேலங்குடியில் திருமணமாகி சம்பவ சமயத்தில் குடியிருந்து வந்தேன். அந்த நேரத்தில் எனது கணவர் கொரனா சமயத்தில் இறந்துபோனார். இவ்வழக்கில் இறந்துபோன ராமராஜன் எனது உடன்பிறந்த தம்பி ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். உள்ளுர்காரர்கள் ஆவார்.

2) இறந்துபோன ராமராஜன் சென்னை அம்மையப்பர் கம்பெனியில் வேலை செய்து வந்தார். எனது கணவர் வைகாசிமாதம் 2021ம் வருடம் 3வருடத்திற்கு முன்பு இறப்பிற்கு என் தம்பி ஊருக்கு வந்தார். 20 நாள் கழித்து இந்த சம்பவம் நடந்தது. சம்பவ சமயத்தில் எனக்கு துணையாக எனது தாயார் வேலங்குடியில் இருந்தார். சாட்சி ராமச்சந்திரன் எனக்கு போன் செய்து என் தம்பியை ஊரணி அருகில் ஆஜர் எதிரிகள் சந்தோஷ் மற்றும் கணேஷ் கொலை செய்ததாக தகவல் வந்தது. நானும் எனது தாயாரும் பாப்பாகுடிக்கு 8.00 மணிக்கு சென்றோம். காலை 5.30, 6.00 மணிக்கு தகவல் கிடைத்தது.

ஊரணி கரையில் என் தம்பியை பார்த்தபோது அவர் கழுத்து, கண்ணம், பின்னந்தலை, ஆகிய இடங்களில் வெட்டுப்பட்டு இறந்துகிடந்தார். அது பிள்ளையார் கோவிலுக்கு அருகில் உள்ளது. அங்கு மண்புழு தொட்டி அமைக்கப்பட்டுள்ளது.

3) அந்த இடத்தை சுற்றி 5 நிமிடம் நடக்கும் தூரத்தில் வீடுகள் உள்ளது. அங்கிருந்து குரல் கொடுத்தால் வீட்டில் உள்ளவர்களுக்கு கேட்கும். 2ம் எதிரி சந்தோஷின் தாயார் சித்ராவுடன் எனது தம்பி ராமராஜன் தொடர்பில் இருப்பதாக ஊரில் இருப்பவர்கள்

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.09.30 17:33:15 +0530

பேசிக்கொண்டார்கள். அதன் காரணமாக ஆஜர்எதிரி இருவரும் எனது தம்பியை வெட்டிக்கொன்றுள்ளார்கள். சம்பவ சமயத்தில் என் தம்பி அணிந்திருந்த உடைகளை தற்போது என்னிடம் காட்டினால் அடையாளம் சொல்லமுடியும். என் தம்பி கைலி மற்றும் டிசர்ட் அணிந்திருந்தார்.

4) என்னிடம் காட்டப்படும் அந்த கைலி தான் சா.பொ.1. ராமச்சந்திரன் மற்றும் எனது தாயார் காவல்நிலையம் சென்று புகார் தெரிவித்தார்கள். போலீசார் 6.00 மணிக்கு சம்பவயிடத்தில் இருந்தார்கள். என் தம்பி இறந்ததற்கான காரணம் குறித்து போலீசார் சொல்லித்தான் தெரிந்துகொண்டேன். எனது தாயாரும் இது குறித்து சொன்னார். இது குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள். எனது தம்பியின் போன் நம்பர் என்னால் சொல்லமுடியாது.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

ராமச்சந்திரன் எனது தாயாருக்குதான் போன் செய்தார். எனது அம்மா சொல்லித்தான் ராமச்சந்திரன் என்ன சொன்னார் என்று எனக்கு தெரியும். வேலங்குடியிலிருந்து மதுரைக்கு சென்று மாட்டுத்தாவணியிலிருந்து திருப்புவனம் வழியாக பூவந்திதாண்டித்தான் பாப்பாகுடிக்கு செல்லவேண்டும் என்றால் சரிதான். ஒவ்வொன்றிற்கும் 4 பேருந்துகள் மாறவேண்டும் என்றால் சரிதான்.

4 பேருந்து மாறும்போது ஒவ்வொரு பேருந்திற்கும் அரைமணிநேரம் காத்திருக்கவேண்டும் என்றால் சரிதான். வீட்டிலிருந்து கிளம்பும்போது 7.00 மணியிருக்கும். சம்பவயிடத்திற்கு நாங்கள் வரும்போது 9.00 மணியிருக்கும். என் தம்பி போன் பயன்படுத்தும் பழக்கம் கொண்டவர் கையில் போன் வைத்திருப்பார் என்றால் சரிதான். போலீசார் சொல்லி என் தம்பி இறந்த காரணம் தெரிந்துகொண்டேன் என்ற விவரத்தை ஆய்வாளர் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

பாப்பாகுடி பழைய பஞ்சாயத்து சேவுகன் மகன் பூபதி, மணி உள்ளார்கள் என்றால் சரிதான். அவர்கள் ஆற்றிலிருந்து மண் அள்ளும் தொழில் செய்கிறார்கள் என்றால் சரிதான். பூபதியின் தந்தை சேவுகன் எனது தந்தையிடமிருந்து சில நிலங்களை கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். அது சுமார் 15 வருடத்திற்கு கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரிதான். குறைந்த விலையில் நிலங்கள் வாங்கப்பட்டது என்று எனது குடும்பத்திற்கும் சேவுகன் குடும்பத்திற்கும் பிரச்சனை இருந்து வந்தது என்றால் அது பற்றி எனக்கு ஞாபகமில்லை.

SWARNAM J NATARAJAN
Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.09.30 17:33:24 +0530

எனது தம்பி அடிக்கடி மணியிடம் சென்று மது அருந்திவிட்டு பிரச்சனை செய்வார் என்றால் சரியல்ல. சாதாரணமாக பேசுவார். நிலத்தை திருப்பி தரும்படி கேட்பார் என்றால்சரியல்ல. மது அருந்தும் சமயம் சென்று கேட்பார் என்றால் சரிதான். என் தம்பி இறந்துகிடந்த இடத்திற்கு பின்னால் கொஞ்சதூரத்தில் பூபதி மணியின் தோப்பு உள்ளது என்றால் சரிதான். இந்த பிரச்சனையில் மேற்கண்ட பூபதி, மணி இருவர் தான் கொன்றதாக ஊருக்குள் முதலில் பேச்சு இருந்தது என்றால் சரிதான். தோப்பில் சிலபேர் தங்க வைத்திருந்தார்கள் அவர்கள் தான் இந்த கொலையை செய்தார்கள் என பேசிக்கொண்டார்கள் என்றால் சரியல்ல.

மணி தற்போது ஒரு கொலை செய்ததாக ஜெயிலில் உள்ளார் என்றால் சரிதான். அவர்கள் மீது நிறைய வழக்குகள் உள்ளது என்றால் சரிதான். இடப்பிரச்சனை சம்மந்தமாக பூபதி மற்றும் மணி எனது தம்பியை கொலை செய்து விட்டார்கள் என்றும் அவர்களை காப்பாற்றும் எண்ணத்தில் எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. சம்பவயிடத்திற்கு கொஞ்சதூரத்தில் கருப்புராஜா வீடு உள்ளது என்றால் சரிதான்.

சாட்சிகள் ஹரிகரன், ஹரிகிருஷ்ணன், ஜானகி, புவனேஷ்வரன், விக்னேஷ்வரன் வீடுகள் 100 மீ தூரத்தில் தள்ளி அமைந்துள்ளது என்றால் சரியல்ல. ஒரே நேராக அமைந்துள்ளது. ஆனால் வீட்டிற்கு சுற்றி வரவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**. இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.09.30 17:33:31 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை

DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No.70/2021

PROSECUTION WITNESS No - PW- 3

| | | | |
|---|---|---|---|
| Name : | மணிகண்டன் | Caste: | |
| Father Name/Husband name | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 30th day of September 2024

எதிரிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்

<u>முதல் விசாரணை :</u>

1) நான் பாப்பாகுடியில் குடியிருந்து வருகிறேன்.விறகு வாங்கி வெட்டும் வேலை செய்கிறேன். வழக்கில் இறந்துபோன ராமராஜன் எனக்கு தெரியும். எனது வீட்டிலிருந்து அவரது வீடு 6, 7 வீடு தள்ளி உள்ளது. எனக்கு ராமச்சந்திரனை தெரியும். அவர் ராமராஜன்வீட்டிற்கு பக்கத்துவீடு. ஆஜர் எதிரிகள் இருவரையும் தெரியும். வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

வாக்குமூலம் வாங்கவில்லை. கையெழுத்து மட்டும்போட்டேன். தேதி, மாத்ம, வருடம் தெரியாது. கடந்த 2, 3 வருடங்களுக்கு முன்பு காலை 6.00, 6.30 மணிக்கு ராமராஜன் இரத்த வெள்ளித்தில் கிடப்பதாக சொல்லி ஊரில் இருக்கும் எல்லோரும் மண்புழு குடோவுன் அருகில் உள்ள பிள்ளையார் கோவிலுக்கு அருகில் ராமராஜ் இறந்து கிடந்ததை பார்த்தோம். அவர் வெட்டி கொலை செய்யப்பட்டு கிடந்தார்.

நான் புவனேஷ், ஹரிகரன், விக்கி, அமுதா ஆகியோர்களை போலீசார் ஜீப்பில் உட்கார வைத்திருந்தார்கள். மாலை 5.00 மணி வரை எங்களை காவல்நிலையத்தில் உட்காரவைத்து அதன்பின்பு கையெழுத்து வாங்கி அனுப்பினார்கள்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி, குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டது. அனுமதியின் பேரில் அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் சரியல்ல. கையெழுத்து மட்டும் தான் வா ங்கினார்கள். ஆஜர் எதிரி சந்தோஷின் தாயார் ஜெயசித்ரா என்பவருக்கும் இறந்துபோன ராமராஜனுக்கும் தொடர்பு இருப்பதாக ஊரில்

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.09.30 17:33:41 +0530

பேசிக்கொண்டதாகவும் அதனால் ராமராஜனுக்கும் சந்தோஷிற்கும்முன்விரோதம் இருந்ததாகவும் சிவகங்கையில் உள்ள கணேஷ்குமாரும், சந்தோஷ்ம் நெருங்கிய நண்பர்கள் என்றும் அவபாக்ள் இருவரும் பாப்பாகுடியில் தங்கி மது அருந்துவார்கள் என்றும் கடந்த 18.06.2021ம் தேதியன்று எங்கள் ஊரில் மீன் விற்றார்கள் என்றும் அதை எல்லோரும் வாங்கி ஊரில் சமைத்துக்கொண்டிருந்தார்கள் என்றும் நானும் எங்கள் ஊரைச்சேர்ந்த உச்சிமுத்து என்பவரும் எங்கள் வீட்டருகே நின்ற பேசிக்கொண்டிருந்தோம் என்றும் அப்போது இரவு 10.45 மணியிருக்கும் என்றும் அந்தநேரத்தில் TN63DJ5803 என்ற பல்சர் இருசக்கர வாகனத்தில் சந்தோஷ்ம், கணேஷ்குமாரும் பிள்ளையார் கோவில் ஊரணிப்பக்கம் வீட்டிற்கு வந்தார்கள் என்றும் அப்போது கொடியில் காயப்போட்டிருந்த துணியை சந்தோஷ் எடுத்துக்கொண்டு வேகமாக சென்றார் என்றும் எதிரிகள்இருவரின் சட்டையில் இரத்தமாக இருந்தது என்றும் மறுநாள் 19.06.2021 காலையில் பிள்ளையார் கோவில் அருகில் மண்புழு உரக்குடோன் அருகில் ராமராஜன் பின்கழுத்து, பக்ககழுத்து ஆகியபகுதியில் வெட்டுப்பட்டு இரத்தவெள்ளத்தில் இறந்துகிடப்பதாக கேள்விப்பட்டு நான் பார்த்தபோது போலீசார் இது சம்மந்மாக விசாரித்தார்கள் என்றும் அப்போது முதல் நாள் இரவு அவர்களை பார்த்த விவரத்தை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

ஆஜர் எதிரிகள் எங்கள் ஊரைச்சேர்ந்தவர்கள் எனது நண்பர்கள் என்றால் சரிதான். நண்பர்களை இந்த வழக்கிலிருந்து காப்பாற்றும் எண்ணத்தில் உண்மைச்சம்பவத்தை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

ராமராஜ் வீட்டிற்கு 6, 7 வீடு தள்ளி எனது வீடு உள்ளது என்றால் சரிதான். சேவுகன் மகன் பூபதி, மணியை தெரியும். அவர்களிடம் இறந்துபோன ராமராஜன் அடிக்கடி மது அருந்திவிட்டு தங்கள் நிலத்தை குறைந்த விலைக்கு வாங்கிவிட்டதாக சண்டை போடுவார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

**மறு விசாரணை**. இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.09.30 17:33:49 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை

DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No. 70 /2021

PROSECUTION WITNESS No - PW- 4

| | | | |
|---|---|---|---|
| Name : | பாலமுருகன் | Caste: | |
| Father Name/Husband name | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 30th day of September 2024.

எதிரிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்

<u>**முதல் விசாரணை :**</u>

1) எனக்கு சொந்தஊர் பாப்பாகுடி. நான் திருப்புவனத்தில் குடியிருந்து எலக்ட்ரிசியன் தொழில் செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன ராமராஜன் என்பவரை தெரியும். வழக்கு சம்பவயிடத்தில் சம்பவம் நடந்த காலையில் ஊரில் உள்ளவர்கள் கூட்டமாக இருந்தபோது நானும் எனது அண்ணன் ஹரிகிருஷ்ணன் என்பவரும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தோம். போலீசார் அங்கு வந்து விசாரணை மேற்கொண்டு வந்தார்க்ள. போட்டோ எடுத்தார்கள். எல்லோரிடமும் கையெழுத்து வாங்கினார்கள் என்னிடமும் என் அண்ணனிடமும் கையெழுத்து வாங்கினார்கள்.எனனிடம் காண்பிக்ககூடிய ஆவணத்தில் உள் ளகையமெ்ழுத்து என்னுடையதுதான் அதே போல் என்னிடம் காண்பிக்ககூடிய மற்றொரு கையெழுத்து என்னுடைய அண்ணனுடையது தான். பபார்வைமகஜரில் உள்ள கையெழுத்து **அ.சா.ஆ.2**. குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையெழுத்து **அ.சா.ஆ.3**. குறியீடு செய்யப்படுகிறது. எங்கள் முன்னிலையில் பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி, குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டது. அனுமதியின் பேரில் அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரிகள் எனக்கு தெரியும். எதிரிகள் எங்கள் ஊரைச்சேர்ந்தவர்கள் தான் பேச்சுவார்த்தை உண்டு. கடந்த 19.06.2021ம் தேதியன்று காலை 8.00 மணிக்க வழக்கு சம்பவயிடமான எங்கள் ஊர் பிள்ளையார் கோவில் அருகில் உள்ள மண்புழு உரக்கிடங்கு அருகில் நா ங்கள் நின்று வேடிக்கை பார்த்தபோது பூவந்தி காவல்நிலையத்திலிருந்து

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.09.30 17:33:58 +0530

போலீசார் வந்து சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் தயாரிெ சய்தார் என்றும் அவ்வாறு தயார் செய்த பார்வைமகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் நானும் என் அண்ணனும் கையெழுத்து போட்டோம் என்றால் சரியல்ல.

சம்பவயிடத்தில் இருந்து இரத்தம் படிந்த சிமிண்ட் தரை, மாதிரி சிமிண்ட் தரை கைப்பற்றினார்கள் என்றும் மாதிரி அத்தாட்சியில் கையெழுத்து போட்டோமள் ன்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகள் உள்ளுர்காரர்கள் என்பதால் அவர்களை காப்பாற்றும் எண்ணத்தில் தற்போது உண்மை சம்பவத்தை மறைத்து பொயள் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

நான் சம்பவயிடத்திற்கு சென்றபோது 8.00 மணிக்கு மேல் இருக்கும் நேரம் சரியாக ஞாபகமில்லை. அந்த இடத்தில் 15 நிமிடம் இருந்திருப்பேன்.

**<u>மறு விசாரணை</u>**. இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.09.30 17:34:03 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை